# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2019.07.23 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## *கம்பெனிகள் (திருத்தம்)*

***2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 427 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அசையும் ஆதனத்தில் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடையற்பாலதான ஏற்பாடுகளைச் செய்வதற்கு 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் சட்டவாக்கத்திற்கான விளைவாந்தன்மையாக, சொல்லப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்ட கம்பெனி ஒன்றினால் வழங்கப்பட்ட மிதக்கும் தாக்கீடுகளைச் செய்வதற்குமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 428 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசையும் ஆதனத்தின்மீது மிதக்கும் தாக்கீடு ஒன்றை உருவாக்குகின்ற ஏதேனும் சாதனத்தினை பதிவுசெய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதற்குமாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 431 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது ஏதேனும் அசையும் ஆதனத்தின்மீது உருவாக்கப்பட்ட மிதக்கும் தாக்கீடுகளின் முன்னுரிமையை தீர்மானிக்கும்போது ஏற்புடையற்பாலதான 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செய்வதற்குமாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் ஏற்புடைமை நோக்கங்களுக்காக "மிதக்கும் தாக்கீடு" என்னும் சொற்பதத்தினை பொருள்கோடல் செய்வதற்காக ஏற்பாடு செய்வதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 433அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துகின்றது.

ச. வ- ஓ. 68/2017

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கம்பெனிகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2.** (இதனகத்துப்பின்னர் ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 427 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ‘‘(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு’’ என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு’’ என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, சட்டத்தின் 427 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 428 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 428 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், ‘‘(117 ஆம் அத்தியாயமான) ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அது விற்பனை உண்டியல் என்றவாறாகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்’’ என்னும் சொற்களில் இருந்து அவ்வுட்பிரிவின் முடிவுவரையான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ‘‘2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் அது விற்பனை உண்டியல் என்றவாறாக பதிவுசெய்யப்படுதல் வேண்டும். அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய மிதக்கும் தாக்கீடு தொடர்பில் ஏற்புடையனவாதல்

வேண்டும்.'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவினை நீக்குவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 431 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 431 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

''(7) கம்பெனி ஒன்றினால் சொந்தமாக்கப்பட்ட ஏதேனும் அசையும் ஆதனம் 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கின்ற தான மிதக்கும் தாக்கீடொன்றிற்கு அமைவாக உள்ள விடத்து, அச்சட்டத்தில் அடங்கியுள்ள முன்னுரிமை தொடர்பான ஏற்பாடுகள் அத்தகைய மிதக்கும் தாக்கீடொன்றின் முன்னுரிமையைத் தீர்மானிப்பதில் ஏற்புடையதாதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 433அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 433 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 433அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

''பொருள் கோடல்.

433அ. இச்சட்டத்தின் இப்பாகத்தில், ''மிதக்கும் தாக்கீடு'' என்னும் சொற்பதம் 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையின் நோக்கத்திற்கான ''பிணைப் பொறுப்பு உரிமை'' ஒன்று எனப்பொருள்படும்.''.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.